Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (30 - 01 - 1991) புதன்கிழமை ஓசை: 346

## பிள்ளைகள் மருந்துவகையில் 16 சதவீதம் மதுசாரம்

(கொழும்பு)

குழந்தைகளின் மருந்துவகைகள் சிலவற்றில் 16 சதவீத மதுசாரம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. நாட்டில் சமீபத்தில் விற்பனைக்கு வந்துள்ள குழந்தைகளுக்கான சில "கிறைப் வாட்டர்" வகைகளில் 16 சதவீதத்திற்கு மேல் மதுசாரம் கலக்கப்பட்டுள்ளமை ஆய்வொன்றின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பில் அழகுசாதன மருந்து வகை மற்றும் மருந்தாக்கத்தொழில்நுட்ப ஆலோசனைக் (4ஆம் பக்கம் பார்க்க)

### வெடிவைத்த கல்லில் இராணுவத்துடனான மோதலில்

# முல்லைத்தீவுத் தளபதி உட்பட நான்கு புலிகள் வீரமரணம்

(முல்லைத் தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெடிவைத்த கல்லு என்னும் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட கடும் மோதலில் முல்லைத்தீவு மாவட்டத் தளபதி மேஜர் காந்தன் உட்பட நான்கு விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்துள்ளனர். இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டதாயினும் சேதவிபரம் தெரியவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வெடிவைத்தகல்லு என்னும் பகுதியில் சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகளின் இயக்கப் போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மறைந்திருந்து தாக்குதலை மேற்கொண்டனர். இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல் மேற்கொண்டபோது கடும் சண்டை ஏற்பட்டது. இச் சண்டையில் இராணுவத்தினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டது ஆயினும் விபரங்கள் பெறமுடியவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் முல்லைத்தீவு மாவட்டப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரின் சூட்டிற்கு கண்ணன் கிராமத்தில் மூவர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாழைச்சேனையில் கண்ணன் கிராமத்துக்கு

கடந்த வெள்ளிக்கிழமை சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலில் புனாணையைச்

### சாலை மறியல் போராட்டத்தில்

## கைதான 26000 பேரில் 24000 பேர் நேற்று விடுதலை

(சென்னை)

தமிழ்நாட்டில் சாலை மறியல் போராட்டத்தை ஒட்டிக் கைது செய்யப்பட்ட 26000க்கும் அதிகமானவர்களில் சுமார் 24000 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். நேற்றுமுன்தினம் சுமார் 900 பேர் விடுதலை செய்யப்பட்டனர். என்றாலும் சுமார் 1000 பேர் திட்டமிட்ட குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டனராம். அவர்களைத் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் தமிழக அரசு வைத்துள்ளது. தடுப்புக்காவலில் இருப்பவர்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் என்பதைத் திட்டவட்டமாகக் காவல்துறை வெளியிடவில்லை.

கைதானவர்கள் விடுதலையானவர்கள் விபரத்தைச் (4 ஆம் பக்கம் பார்க்க)

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாழைச்சேனையில் கண்ணகி கிராமத்துக்கு வந்த சிறிலங்கா இராணுவத்தினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ததில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலில் புனானையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான லஷ்மாணி (வயது 30), அதேயிடத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான பீற்றர் யோகராசா

(4 ஆம் பக்கம் பார்க்க)

...பெறமுடியவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் முல்லைத்தீவு மாவட்டப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

1000 பேர் திட்டமிட்ட குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டனராம் அவர்களைத்

கைதானவர்கள் விடுதலையானவர்கள் விபரத்தைச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திறந்த மனத்துடன் நட்புச் சூழலில் பேச்சுவார்த்தை இடம் பெற்றது

(கொழும்பு)

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சருடனும், அதிகாரிகளுடனும் நடாத்திய பேச்சுவார்த்தை நட்புச்சூழ்நிலையில், திறந்த மனதுடன் நடாத்தப்பட்டதாக இந்திய வெளிவிவகாரச் செயலாளர் முஸ்குந்த் துபே நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மேலும் அவர் பத்திரிகையாளரிடம் பேசும் போது:

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அமுலாக்கம் இலங்கையில் வாழும் பல்வேறு இனங்களிடையேயும் இணக்கங்கள் என்ன உட்பட மன்னாரில் எண்ணெய் ஆய்வு மேற்கொள்ளுதல், தேயிலை விற்பனையில் ஒத்துழைப்பு பேணுதல், இலங்கை-இந்திய பொருளாதார கமிஷன் செயற்பட வகைசெய்தல் என்பவற்றுடன் வளைகுடா பற்றிய நிலைமைகளும் அதிகாரிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## படுவான்கரை மாணவன் எழுவான்கரையில் படுகொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப் பகுதியில் உள்ள திருப்பழுகாமத்தைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவரொருவரை சிறிலங்கா இராணுவத்தினர் படுகொலை செய்தபின் ரயர் போட்டு எரித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை திருப்பழுகாமத்தில் இருந்து எழுவான்கரைப் பகுதியான களுவாஞ்சிக்குடிக்குச் சென்ற ஞானமாணிக்கம் தேவகலைவன் (வயது 22) என்ற உயர்தர வகுப்பு மாணவரே அந்த முகாமிலிருந்த சிறிலங்கா இராணுவத்தினரால் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

## வவுனியா காவல் அரணில் 24 தமிழ் இளைஞர் கைது

(வவுனியா)

வவுனியா யாழ். வீதி காவல் சோதனை முகாமில் கடந்த 27 ஆம் திகதி 24 தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர் இவர்களில் பதினைந்து பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

குறிப்பிட்ட வீதி காவல் சோதனை முகாமில் உள்ள இராணுவத்தினரால் பொது மக்கள் மீது மேற்கொள்ளப்படும் கெடுபிடிகள் மோசமடைந்திருப்பதாகப் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (தி)

## ஜே. ஆர். - சுக்ளா சந்திப்பு

சிறிலங்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய அமைச்சர் வி. சி. சுக்ளா முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவை நேற்றுப் பிற்பகலில் சந்தித்துப் பேசியுள்ளார்.

## 6 ஆம் ஆண்டு அனுமதி பரீட்சை பெப்ரவரி 6 இல் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

தேசிய பாடசாலைகளிரண்டிற்கும் ஆண்டு ஆறு அனுமதிக்கான போட்டிப்பரீட்சைத் திகதி பெப்ரவரி மாதம் ஒன்பதாம் திகதி என கல்விப் பணிப்பாளரால் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது என பிர

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அடம்பன் குடியிருப்புக்கள் மீது விமானக் குண்டு வீச்சு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள அடம்பன் கிராமம் மீது சிறிலங்கா விமானப் படை குண்டு வீச்சு விமானங்கள் குண்டுத்தாக்குதலை நடத்தியுள்ளன.

நேற்று முன் தினம் காலை 9 15 மணியளவில் இப்பகுதியில் வட்டமிட்ட மூன்று குண்டு வீச்சு விமானங்கள் பொது மக்களின் குடியிருப்பு பகுதிகளை நோக்கி பல தடவைகள் குண்டுகளை வீசின.

குண்டு வீச்சின் போது பொதுமக்களின் குடியிருப்பு ஒன்று தரைமட்டமாகியது. மேலும் பல வீடுகள் சேதமடைந்தன.

இப்பகுதி மக்கள் பாதுகாப்பான பகுதிகளில் தஞ்சமடைந்திருந்தமையால் உயிரழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. (ச)

## 11 இந்துக்கள் கொலை

(சண்டிகார்)

பதினொரு இந்துக்கள் சீக்கிய தீவிரவாதிகளால் கொல்லப்பட்டதாக பஞ்சாப் பொலிசார் தெரிவித்துள்ளனர்

## வீரவணக்கம்

### கணேஸ்

கடும் சுகயீனமுற்றிருந்த பேரளி கணேஸ் (தேவாலய வீதி, சங்கானை) நேற்று முன் தினம் மரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## வளைகுடாவிற்கு 5லட். கருத்தடை உறைகள்

(லண்டன்)

வளைகுடாவில் உள்ள அமெரிக்க சார்புப் படைகளுக்கு 5 லட்சம் கருத்தடை உறைகளை (கண்டோம்) விநியோகிப்பதற்கான விசேட ஒப்பந்தம் ஒன்றை பிரிட்டிஷ் கம்பனி பெற்றுள்ளது.

இந்தக் கருத்தடை உறைகள் வளைகுடா நாடுகளில் பாலைவனப் பகுதியில் போரிடும் படைகளின் துப்பாக்கிகளுக்குள் மணல் புகாமல் தடுப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கல்லூரியில் வெளிநோயாளர் பிரிவு

யாழ்நகரில் அமைந்துள்ள இலங்கை ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் இன்று புதன்கிழமை முதல் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை இயங்கும்.

இச் சிகிச்சைப் பிரிவானது நீண்ட காலமாக கல்லூரிக்கு இருந்து வந்த குறையை நிவர்த்தி செய்து அது முழுமை பெற உதவும் என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சையும், மருத்துவ ஆலோசனைகளையும் இலவசமாக வழங்கப்படும்.

## கஜுவத்தை, சிலா.துறை முகாம் இராணுவம் புலிகள் மோதல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள கஜுவத்தை, சிலாவத்துறை சிறிலங்கா இராணுவ முகாம்களில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கடுமையான எதிர்த்தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை 2 45 மணியளவில் இம்முகாம்களில் நூற்றுக்கணக்கான சிறிலங்கா இராணுவத்தினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### நியூ வெஸ்ரோன் எலெக்ரோனிக் கோப்

ரி. வி. டெக், றேடியோ, மணிக்கூடு, றிவைண்டிங் மற்றும் எல்லாவிதமான மின்சார உபகரணங்களும் திருத்துபவர்களும், விற்பனையாளர்களும், வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும், புதிய பழைய பாடல்களும் (புரட்சிப் பாடல்கள்) பதிவுசெய்து கொடுக்கப்படும். இலக்கம் 741, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டைச் சந்தி, யாழ்ப்பாணம்.
(B- 1893)

### போட்டோஸ்ரற்

நல்லூரில் தரமான, தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும் கறுப்பு வெள்ளை புகைப்படங்களுக்கும் நாடுங்கள் சித்ராலயா. 351, கோயில் வீதி, நல்லூர் (கோயில் வீதியில் கம்பன் கோட்ட முன்பாக) (B/1941)

### இடம்மாற்றம்

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் வண்டி ஊழியர் சங்கம் 01-02-91 இல் இருந்து இல. 55.வேம்படி வீதிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
(R- 1060)

### கொம்பியூட்டர் கல்வி

Computer Programming in Basic Language என், ஈ யிற வகுப்புகள் ஆரம்பம் 02 02-91 10-30 a. m Book - Keeping, Short Hand & Typing வகுப்புகள் நடைபெறுகின்றன. School of Business Administration 16, 3rd Cross Street, Jaffna. (B- 1948)

### தவறிவிட்டது

சி நல்லதம்பி என்பவருடைய அடையாள அட்டை இல. 372092475X வவுனியாவுக்கும் பூநகரிக்கும் இடையில் தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.
(R/ 1061)

### தேவை

இடைச்சி (Cork) முழுப் போத்தல், அரைப்போத்தல்களுக்கானவை தேவை. மில்க்வைற் - யாழ்ப்பாணம்.
(B- 1947)

## நிர்வாகிகள் தெரிவு

நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றது. சி.ர்ஷ்ய சிருங்கர் தலைவராகவும், செல்வி இ அற்புதசோதி செயலாளராகவும். செ. சுதந்திரராசா பொருளாளராகவும். செல்வி கு. கமலா ஜினி உபதலைவராகவும். சோ. விஜயசிங்கம் உப செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். இத்துடன் ஏழுபேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## மேஜர் தாரணிக்கு பூநகரியில் அஞ்சலி

(பூநகரி)

பலாலி கட்டுவன் பகுதியில் இறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த மேஜர் தாரணி அவர்களின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக பூநகரி வாடியடி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை 11 30 மணியளவில் வைக்கப்பட்டது. அங்கு பெருந்திரளான மக்கள் அஞ்சலி செலுத்திச் சென்றனர். (71)

---

## 179 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

05-08-1990 அன்று யாழ். கோட்டை முகாம் தாக்குதலின்போது வீரமரணமடைந்த

### 2ஆவது லெப்ரினன்ட் டயஸ்

அவர்களுக்கும், அவருடன் மரணித்த ஏனைய வீரவேங்கைகளுக்கும் எமது இதய அஞ்சலியை தெரிவித்துக் கொள்ளுகின்றோம.



ஈழ மண்ணில் மலர்ந்தது 18- 12- 1971

ஈழ மண்ணுக்காய் மறைந்தது 05 -08- 1990

### 2ஆவது லெபரினன்ட் டயஸ்
### செ. இராஜேந்திரகுமார் (பாபு)

அன்பின் திருவுருவே ஆண்மையின் சிகரமே
எங்கள் குலவிளக்கே ஏங்குதே எம்மிதயம் உன்பிரிவினாலே
வேங்கையாய் நீயும் வெறிகொண்டெழுந்தாய்
வெளிப்பட்ட ஆமியின் கொட்டம் அடக்கினாய்!
விடுதலைப் பாதையின் இடையிலே நீயும்
மரணித்த மா வீரன் என நாமம் கொண்டாய்
இலட்சிய தீபங்கள் இருளினை நாட
இறுதிவரை ஒளிகொண்டு இலக்கினையே நாடும்
எம் மனமோ உன்நினைவால் இறுதிவரை வாடும்!


05. 08. 1990 அன்று அன்னாரின் இறுதிக் கிரியைகளின்போது எமக்கு நேரில்வந்து ஆறுதல் கூறியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், வேறு வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, 30. 01. 1991 இன்று புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் பங்கு கொள்ளுமாறு உறவினர்களையும், நண்பர்களையும், இயக்க நண்பர்களையும், நண்பிகளையும், அன்புடன் அழைக்கின்றோம்.

தாய், தகப்பன், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

இருபாலை.
(B/1592)

---

## 6 ஆம் மாத நினைவஞ்சலி





**செலவரததினம் செல்வகுமார் (ராசன்)**
யாழ்/நாயன்மார்கட்டு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பேய்ச்சியம்மன் ஆலய தண்ணீர்ப் பந்தல்சபை பொருளாளர், சன சமூக நிலைய உறுப்பினர்.
படைப்பு: 26 06-1966

**காசிலிங்கம் சிவபாலன்** மாம்பழம்
யாழ். நாயன்மார்கட்டு சனசமூக நிலைய உப. தலைவர், தண்ணீர்ப் பந்தல்சபை உறுப்பினர்.
படைப்பு: 18-05-1963

பறிப்பு: 7 - 8 - 1990
(அத்தியடி அம்பலவாணர் வீதியில் இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சில்)
தீதி: 30-01-1991

வீதியில் பழி போட
விரும்பவில்லை - வினை
விதைத்தவர் செயலினைப்
பொறுக்கவில்லை
வதிவீர் மனதிடை நண்பர்களே -புது
வாழ்வினைப் படைத்திடப் பிறந்திடுவீர்
- நண்பர்கள்

(B- 1953)

---


## மில்க்வைற் திரவ சவர்க்காரம்

சகலதேவை அழுக்கு நீக்கி
Milkwhite Liquid Soap
ALL - PURPOSE DIRT REMOVER

சாதாரண வீட்டுச் சலவைக்குப் பாவிக்கும் முறை:

1. ஒரு லீற்றர் நீரில் பத்து மேசைக்கரண்டி மில்க்வைற் திரவ சவர்க்காரத்தை ஊற்றவும்.
2. நுரை செறிந்திட நீரைக் கலக்கவும்.
3. கலவையுள் ஈரத் துணியை அமிழ்த்திக் கலவையைத் துணியில் செறியச் செய்யவும்.
4. பத்து நிமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்றாக அலசி எடுக்கவும்.
5. சலவை செய்யும் துணிகளின் எண்ணிக்கைக்கும் பொலிவுக்கும் ஏற்ப அளவில் மாற்றஞ் செய்யவும்.

— மில்க்வைற்

(B- 1950)


---

### யாழ். மாவட்டத் தேசிய பாடசாலைகள்
### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி

## ஆண்டு 6 பிரவேசப் பரீட்சை-1991

01. பரீட்சைத் தினம்:
09 02-1991 சனிக்கிழமை காலை 9 00 மணி

02. பரீட்சைக்குரிய பிரவேசப் பத்திரங்களை உரிய பாடசாலை அலுவலகத்தில் 05 02-1991 செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| செல்வி இ. இராஜரத்தினம் | க. இ. குகதாசன் |
| அதிபர் | அதிபர் |
| வேம்படி மகளிர் கல்லூரி | யாழ். இந்துக் கல்லூரி |

30-01-1991.
(B, 1949)

---

## நினைவு கூருகின்றோம்!

## ஜனவரி 30

1986ஆம் ஆண்டு தேடுதலுக்காகப் புறப்பட்ட இராணுவத்தினரை வட்டக்கச்சி - தர்மபுரம் வீதியில் முற்றுகைக்குள்ளாக்கியிருந்த போது வீரமரணமடைந்த

**லெப்.சம்பந்தன்** (செ.ஞானசுந்தரம்-திருமலை)

இதே தினத்தில் வீரமரணமடைந்த

**சுகு** (கு ரமேஸ் - தண்ணீரூற்று - முள்ளியவளை)

இதே தினத்தில் தொண்டைமனாற்றில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த

**கப்டன் சுருளி** (பா. மனோகரன் - திருமலை)

1987ஆம் ஆண்டு கொக்கட்டிச் சோலையில் முற்றுகையின் போது படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

எதிரிக்கு அஞ்சாமல்
எமனிடம் கெஞ்சாமல்
ஏ. கே ஏந்திய கரங்கள்
பூமி தணிந்திடப்
பூண்டது பெரும் தவம்!
பாடும் ராகங்கள்
பூபாள மாக...!
உயிரின் கீதங்கள்
இலட்சிய வேதமாக...!
தேடும் சோலைகள்
இனி வந்து சேரும்
நாட்கள் தூரமில்லைக்
கனவு நனவாகும்...!

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-1898)

★ சிந்தனைக்கு ★

கோழைத்தனம் வன்முறை, இந்த இரண்டையும் தவிர வேறு வழியில்லை என்றால், வன்முறையை மேற்கொள்ளுமாறே நான் ஆலோசனை கூறுவேன்.

— மகாத்மாகாந்திஜி

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி யாழ்ப்பாணம். 30-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த பெ.எண் 05

# சுக்ளாவின் வருகை உப்பில்லாத சமையல்

இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண புதுடில்லி அரசு சில புதிய யோசனைகளைத் தயாரித்துள்ளது இதன் மூலம் புதிய கண்ணோட்டத்தில் பிரச்சினையை அணுக இந்தியா முன்வந்துள்ளது என கொழும்பிற்கு புறப்படும் முன்னர் மதுரையில் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசிய இந்திய வெளி விவகார அமைச்சர் வி சி சுக்ளா தெரிவித்தார்.

மேலும் இலங்கைக்கு நான் நம்பிக்கையுடன் செல்கிறேன் எனக் குறிப்பிட்ட அமைச்சர் சுக்ளா இந்திய-இலங்கை ஒப்பந்தம் குறித்தும் இந்தியா புதிய சிந்தனைகளைக் கொண்டுள்ளது எனவும் இலங்கை விவகாரங்கள் முழுவதையும் தான் தெரிந்து வைத்திருப்பதாகவும் தெரிவித்தார் அத்தோடு தனது விஜயத்தின் போது இலங்கை - இந்திய உறவு பொருளாதார ஒத்துழைப்பு. சார்க் அமைப்பு. வளைகுடாப் பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சர் சுக்ளாவின் வருகைக்கு முன்னரே இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஜா பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில 1987 இல் செய்யப்பட்ட இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் ஒதுக்கித் தள்ளி விடக்கூடியதொன்றல்ல எனவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுக்ளாவின் வருகையை சிறிலங்கா அரசாங்கம் பெரிது படுத்தியதாக இல்லை நேற்று முன்தினம் இந்திய அமைச்சர் சிறிலங்காவிற்கு வர இருப்பதற்கு ஒரு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தொலைக்காட்சியின் செய்தி அறிக்கைகளில் சுக்ளாவின் வரவு பற்றி ஒரு சிறு குறிப்புக் கூட இடம் பெறவில்லை.

அமைச்சர் சுக்ளா வரவிற்குப் பின்னர் ஒலிபரப்பிய செய்தியின் கூட அவரது வரவிற்கு பெரும் முக்கியத்துவம் கொடுக்க வில்லை. ஒலிபரப்பிய செய்தியிலும் இந்திய - சிறிலங்காவின் பொருளாதார விடயங்கள் பற்றியும் வளைகுடாப் பிரச்சினை பற்றியும் பேசப்படும் என செய்தி வெளியிட்டனவே ஒழிய இந்திய இலங்கை ஒப்பந்தம் பற்றியோ தமிழரின் தேசிய இனப்பிரச்சினை பற்றியோ பேசப்படும் என்றோ அவ்வாறான பிரச்சினைகள் நாட்டில் உள்ளன போன்றோ சிறிலங்கா அரசு காட்டிக் கொள்ளவில்லை அதாவது தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கும், இந்தியாவிற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதைக் காட்டுவது போனறே நடந்து கொண்டது.

அதேவேளை வடக்குப் பகுதியில் விமானத்தாக்குதல்களையும் தீவிரப்படுத்தியது. அதாவது இப்பிரச்சினையில் இந்தியா கேட்பதற்கு எதுவுமில்லை என்பது

# உடைந்த வீடுகளில்

1977 ஆம் ஆண்டு யாழ் நகரப் பகுதி பொலிஸாரால் தீக்கிரையாக்கப்பட்டது அச்சம்பவங்களின்தொகுப்பு "24 மணிநேரம்" என்ற பெயரில் வரதர் வெளியீடாக வெளிவந்தது. "நீலவண்ணன்" இதனை எழுதியிருந்தார். எரிக்கப்பட்ட கட்டடங்கள், கடைகள் புனரமைக்கப்பட்டாலும் மீண்டும் 1981 இல் யாழ்ப்பாணம் "எரியுண்டது. இந்நிகழ்வுகள் மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது" என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்தது அதையும் நீலவண்ணனே எழுதியிருந்தார்.

போராளியாக மாறுவதே மேல் என்று தமிழ் இளைஞர்கள் தீர்மானித்தனர். அதே வேளை ஸ்ரீலங்கா அரசு தொடர்ந்து இப்படியே இச்சிறு செயல்களை பாரதூரமாக நீதிமன்றம் கருதக் கூடாது என தீர்மானித்தது. இதற்காக அரசபடையினர் செய்யும் கொலைகளை நியாயப்படுத்தும் வகையில் சட்டங்களை இயற்றியது. நீதியின் பொருட்டு ஆக்கப்பட வேண்டிய சட்டங்கள் நியாயப்படுத்தலை மையமாக வைத்து ஆக்கப்பட்டன படுகொலை செய்பவர்களுக்கு பதவியுயர்வுதான் பலவான்

றது. பொலிஸ்ண்டி சனசமூக நிலையம் தீக்கிரையாககப்பட்டது சுமார் 2000 புத்தகங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. மாணவர்களுக்கு இலவச கல்வியுடன் இலவச பாடப் புத்தகங்களும் வழங்கப்பட வேண்டும் என்று அனனி எம்.பியாக இருக்கும் போதே கூறினார் என்று பாராட்டப்படும் ஜே. ஆரின் ஆட்சிக் காலத்தில் தான் இது நடந்தது இத்துடன் 63வீடுகள், 5 கடைகள், ஓர் அரிசி ஆலை என்பனவும் தீக்கிரையாகின. சுமார் 35 இலட்சம் ரூபா நஷ்டம் என்று அக்காலத்தில் மதிப்பிடப்பட்டது.

## நான்காவது சம்பவம்

நான்காவது சம்பவம் 1985ஆம் ஆண்டு நிகழ்ந்தது. மே மாதம் 9 ஆம் திகதி

# உடையாத உள்ளங்கள்

அப்போது ஓர் இளைஞர் (தற்போது புலிகள் இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவர்) "நான் இந்தப் புத்தகத்துக்கு சந்தா கட்டப் போகிறேன்" என்று ஆத்திரம் கலந்த வேதனையில் கூறினார். வல்வெட்டித்துறை நிலைமையும் அதேதான். தொடர்ச்சியாக ஒரு நகரம் குறி வைத்துத் தாக்கப்படும் போது வேறு எந்த மாதிரியும் எண்ண வராது. அழிகிறது. அழிகிறது என்று சொல்லிக் கொண்டேயிருக்க முடியாத நிலைமை அழிந்து போய் விட்டது என்று தான்சொல்ல முடியும். குறிப்பாக, ஆதி கோவிலடி என்ற பகுதியில் தற்போது எந்த வீடுகளுமே இல்லை முன்னொரு காலத்தில தமிழர்கள் இங்கே வாழ்ந்தார்கள என்று தான் சொலல முடியும்.

கடந்த 10 ஆம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக மூன்று நாட்கள் குண்டுகளால் நிரம்பியது வல்வை. வளைகுடா யுத்தம் தீவிரமடைவது குறித்தும் அப்பாவி மக்களின் உயிரிழப்புகள் குறித்தும் சிறிலங்கா ஜனாதிபதி கொழும்பில் சோககீதம் இசைக்கையில் அவரது அர்த்தத்துக்கு ஏற்ற வகையில் வல்வையில் பின்னணி இசையை எழுப்பிய வண்ணம் இருந்தன அவரது போர் விமானங்கள். உயிரிழந்தோர், காயமடைந்தோர் பட்ட அவலம் சொல்லி முடியாது. கர்ப்பிணிகள், கைக்குழந்தைகள் உள்ள தாய்மார்கள், சிறுவர்கள், முதியோர் தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்ள வல்வையை விட்டு வெளியேறப் பட்ட பாடு சொல்லில் அடங்காது.

புத்தரின் வழி நடப்போரின் ஆட்சியில் அதைத்தானே 1974 ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளிலிருந்து காண்கிறோம்.

## மீண்டும் வல்வை நோக்கி

மீண்டும் 1984 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நரபலிப்படை மூலம் கடல் வழியாக வந்திறங்கினர் ஸ்ரீலங்கா அரசபடையினர் இத்தமன்

மீண்டும் அங்கே படைகள் குவிக்கப்பட்டன அப்போது விடுதலை இயக்கம் கணிசமான வளர்ச்சியடைந்து விட்டது. எனவே இந்தகற்றிவளைப்புக்கு தலைமை தாங்கிய பிரிகேடியர் ஜெயரட்ண டிஸ், மற்றும் பல இராணுவத்தினர் சவப்பெட்டியில் செல்லவேண்டியதாயிற்று ஒருநாள் நிலையத்தினுள் கைதுசெய்த இளைஞர்களைப் பூட்டி அக்கட்டடத்தை வெடிவைத்துத்

> வல்வெட்டித்துறையில் குறிப்பாக ஆதிகோவிலடியில் முன்னொரு காலத்தில் தமிழர்கள் இங்கே வாழ்ந்தார்கள் என்றுதான் கூறமுடியும்.

மாறிவிட்டது என்பதைக் கரையிலிருந்து புறப்பட்ட வேட்டொலிகள் அவர்களுக்கு உணர்த்தின. இறந்தவர்களது சடலங்களை தூக்கியும் தூக்காமலும் ஓடித்தப்பியது அரசபடை. இதற்குப் பழிவாங்கு முகமாக பெருமளவில் குவிந்த படைகள் வல்வை நகரை மீண்டும் தீக்கிரையாக்கின. "வல்வெட்டித்துறை கடற்கரைப் பட்டினம் முற்றாக எரிந்தது" என்று இச்சம்பவத்தை வர்ணிக்கது பிபிசி என்றலும் நிமிர்ந்தே நின்றது வல்வை, அழிக்கப்பட்டதை விட வேகமாக புனர் நிர்மாணம் செய்யப் பட்டது

## மூன்றாவது சம்பவம்

மூன்றாவது சம்பவம் 1985 ஜனவரி 31 இல் நடைபெற்

தகர்த்தனர் ஸ்ரீலங்காப் படையினர் 25பேர் தெருவில் கட்டுக் கொல்லப்பட்டனர். மொத்தமாக 90பேர் இச்சுற்றிவளைப்பில் கொல்லப் பட்டனர் திருமணமான மற்றும் இளம்பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். நாகரிகத்தில் எவ்வளவு தூரம் வளர்ச்சி அடைந்துள்ளனர் என்பதை அன்று ஸ்ரீலங்காப்படையினர் உணர்த்தினர். எனினும் வல்வை மக்கள் அஞ்சிட வில்லை. இது ஒரு வீரமிக்க மாதிரி முயற்சி என்று பலர் எள்ளிநகையாடிய போதும் தமது சுரத்தைப் புதுப்பித்தனர். நிமிர்ந்தே நின்றனர்.

(தொடரும்)

# தீவுப்பகுதிக்கான அராலி வீதி

செல்கிறேன் எனக் குறிப்பிட்ட அமைச்சர் சுக்லா இந்திய-இலங்கை ஒப்பந்தம் குறித்தும் இந்தியா புதிய சிந்தனைகளைக் கொண்டுள்ளது எனவும் இலங்கை விவகாரங்கள் முழுவதையும் தான் தெரிந்து வைத்திருப்பதாகவும் தெரிவித்தார் அத்தோடு தனது விஜயத்தின் போது இலங்கை - இந்திய உறவு பொருளாதார ஒத்துழைப்பு. சார்க் அமைப்பு. வளைகுடாப் பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சர் சுக்லாவின் வருகைக்கு முன்னரே இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஈழ பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில 1987 இல் செய்யப்பட்ட இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் ஒதுக்கித் தள்ளி விடக்கூடியதொன்றல்ல எனவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுக்லாவின் வருகையை சிறிலங்கா அரசாங்கம் பெரிது படுத்தியதாக இல்லை. நேற்று முன்தினம் இந்திய அமைச்சர் சிறிலங்காவிற்கு வர இருப்பதற்கு ஒரு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தொலைக்காட்சியின் செய்தி அறிக்கைகளில் சுக்லாவின் வரவு பற்றி ஒரு சிறு குறிப்புக் கூட இடம் பெறவில்லை.

அமைச்சர் சுக்லா வரவிற்குப் பின்னர் ஒலிபரப்பிய செய்திகளில் கூட அவரது வரவிற்கு பெரும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஒலிபரப்பிய செய்திகளிலும் இந்திய - சிறிலங்காவின் பொருளாதார விடயங்கள் பற்றியும் வளைகுடாப் பிரச்சினை பற்றியும் பேசப்படும் என செய்தி வெளியிட்டனவே ஒழிய இந்திய இலங்கை ஒப்பந்தம் பற்றியோ தமிழரின் தேசிய இனப்பிரச்சினை பற்றியோ பேசப்படும் என்றோ அவ்வாறான பிரச்சினைகள் நாட்டில் உள்ளன போன்றோ சிறிலங்கா அரசு காட்டிக் கொள்ளவில்லை. அதாவது தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கும், இந்தியாவிற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதைக் காட்டுவது போலவே நடந்து கொண்டது.

அதேவேளை வடக்குப் பகுதியில் விமானத்தாக்குதல்களையும் தீவிரப்படுத்தியது. அதாவது இப்பிரச்சினையில் இந்தியா கேட்பதற்கு எதுவுமில்லை என்பது போன்ற செயற்பாடு இதுவாகும்.

இந்த நிலையில் சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின ஒரு வாரத்திற்கு முன்னர் இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒரு காலம் கடந்த கதை என்று குறிப்பிட்டதையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

அத்தோடு அண்மையில் இலங்கையில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் சம்பவங்களும் சிறிலங்கா அரசாங்கத்தின் நடத்தையும் தமிழர் தேசிய பிரச்சினைக்கு சமாதான ரீதியில் ஒரு தீர்வு ஏற்படுவதை விரும்பவில்லை என்பதை வெளிக் காட்டியுள்ளன. தமிழர் பிரச்சினையை பேசித் தீர்க்கத் தயார் என அறிவித்து வந்த சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப்புலிகள் அறிவித்த ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பையும் பேச்சு வார்த்தைக்கான அழைப்பையும் நிராகரித்தது.

அதேவேளை தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது இத்தாக்குதலினால் கடந்த வாரம் வல்வெட்டித்துறை குடியிருப்புக்கள் சிறிலங்கா விமானப்படையினால் முற்றாக அழிக்கப்பட்டும் விட்டன.

மேலும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சர்வதேச மத்தியஸ்தம் வேண்டும் எனக் கூறி வந்த சிறிலங்கா அரசாங்கம் மத்தியஸ்தம் வகிப்பதற்கு நோர்வே, சுவீடன், நெதர்லாந்து நியூசிலாந்து, அவுஸ்திரேலியா என்பன எடுத்த முயற்சிகளிலும் சிறிலங்கா அரசாங்கம் அசட்டையாக உள்ளதாக யாழ்ப்பாணம் வந்துள்ள சுவீடன் நாட்டுப் பேராசிரியர் பீட்டர் சார்க் தெரிவித்துள்ளார்.

இவ்வாறாக சமாதான வழிகளைப் புறக்கணித்து இராணுவ நடவடிக்கைகளை சிறிலங்கா அரசாங்கம் முனைப்புப்படுத்தியுள்ள வேளையில் சிறிலங்கா அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்ட மத்தியஸ்தரான இந்தியாவின் 'புதிய திட்டத்துடன்' கொழும்பு வந்துள்ள அமைச்சர் சுக்லா தமிழர் தேசிய பிரச்சினையில் பெரிதாக எதையும் சாதித்துவிடுவார் என எண்ணுவதற்கில்லை.

---

...ம் கலந்த வேதனையில் கூறினார். வல்வெட்டித்துறை நிலைமையும் அதேதான். தொடர்ச்சியாக ஒரு நகரம் குறி வைத்துத் தாக்கப்படும் போது வேறு எந்த மாதிரியும் எண்ண வராது. அழிகிறது. அழிகிறது என்று சொல்லிக் கொண்டேயிருக்க முடியாக நிலைமை அழிந்தே போய் விட்டது என்று தான் சொல்ல முடியும். குறிப்பாக, ஆதிகோவிலடி என்ற பகுதியில் தற்போது எந்த வீடுகளுமே இல்லை முன்னொரு காலத்தில தமிழர்கள் இங்கே வாழ்ந்தார்கள என்று தான் சொல்ல முடியும்.

கடந்த 10 ஆம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக மூன்று நாட்கள் குண்டுகளால் நிரம்பியது வல்வை. வளைகுடா வில் யுத்தம் தீவிரமடைவது குறித்தும் அப்பாவி மக்களின் உயிரிழப்புகள் குறித்தும் சிறிலங்கா ஜனாதிபதி கொழும்பில் சோககீதம் இசைக்கையில் அவரது அர்த்தத்துக்கு ஏற்ற வகையில் வல்வையில் பின்னணி இசையை எழுப்பிய வண்ணம் இருந்தன அவரது போர் விமானங்கள். உயிரிழந்தோர், காயமடைந்தோர் பட்ட அவலம் சொல்லி முடியாது. கர்ப்பிணிகள், கைக் குழந்தைகள் உள்ள தாய்மார்கள், சிறுவர்கள், முதியோர் தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்ள வல்வையை விட்டு வெளியேறப் பட்ட பாடு சொல்லில் அடங்காது.

**முதல் படுகொலை**

அழிக்கப்பட்ட வல்வையைப் பார்த்து விட்டு வரப் புறப்பட்டேன். ஏற்கனவே இந்தப் பகுதியை வீடியோ வினால் படமாக்குவதற்குத் தீர்மானித்த "நிதர்சனம்" பரதன் குழுவினருடன் தொற்றிக்கொண்டேன். போவதற்கு முன், இதற்குமுன் வல்வையில் நடந்தவற்றை மீள நினைத்துக் கொண்டேன். எனக்குத் தெரிந்தவரை சிறிலங்கா அரசபடைகளால் வல்வை மகன் ஒருவர் கொல்லப்பட்டது 1979 இல் நிகழ்ந்தது 13-10-79 சனிக்கிழமை அன்று இச்சம்பவம் நிகழ்ந்தது. பலாலி இராணுவ முகாம் சிப்பாய்கள் தமக்குச் சரியாகச் சுடத்தெரியும் என்பதை சோமசுந்தரம் சுபாஸ் என்ற 21 வயது இளைஞனில் குறி பார்த்து நிரூபித்தார்கள், அன்றும் வல்வை எரிந்தது. ஜெயலோன்றி உட்பட பல கடைகள் எரிந்தன. "சுபாஸ் என்ற இளைஞனின் மரணம் கொலையே தான்" என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. 2-11-79 அன்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் இத்தீர்ப்பு கிடைத்தது. இந்நிலை தொடரக் கூடாது என தமிழ் இளைஞர்களும் சிறிலங்கா அரசும் தீர்மானித்தனர். ஆனால் வெவ்வேறு விதமாக. அப்பாவியாக இறப்பதைவிட மண்மீட்புப்போரில்

**மீண்டும் வல்வை நோக்கி**

மீண்டும் 1984 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தரபலி படகு மூலம் கடல் வழியாக வந்திறங்கினர் ஸ்ரீலங்கா அரசபடையினர் இந்தமண்

> வல்வெட்டித்துறையில் குறிப்பாக ஆதிகோவிலடியில் முன்னொரு காலத்தில் தமிழர்கள் இங்கே வாழ்ந்தார்கள் என்றுதான் கூறமுடியும்.

மாறிவிட்டது என்பதைக் கரையிலிருந்து புறப்பட்ட வேட்டொலிகள் அவர்களுக்கு உணர்த்தின. இறந்தவர்களது சடலங்களை தூக்கியும் தூக்காமலும் ஓடித்தப்பியது அரசபடை. இதற்குப் பழிவாங்கு முகமாக பெருமளவில் குவிந்த படைகள் வல்வை நகரை மீண்டும் தீக்கிரையாக்கின. "வல்வெட்டித்துறை கடற்கரைப் பட்டினம் முற்றாக எரிந்தது" என்று இச்சம்பவத்தை வர்ணித்தது பிபிசி என்றாலும் நிமிர்ந்தே நின்றது வல்வை, அழிக்கப் பட்டதைவிட வேகமாக புனர் நிர்மாணம் செய்யப் பட்டது

**மூன்றாவது சம்பவம்**

மூன்றாவது சம்பவம் 1985 ஜனவரி 31 இல் நடைபெற்

...மேஜர் பெர்ணாண்டீஸ், மற்றும் பல இராணுவத்தினர் சவப் பெட்டியில் செல்லவேண்டியேற்பட்டது ஒருநூல் நிலையத்தினுள் கைதுசெய்த இளைஞர்களைப் பூட்டி அக்கட்டடத்தை வெடிவைத்துத் தகர்த்தனர் ஸ்ரீலங்காப் படையினர் 25பேர் தெருவில் சுட்டுக் கொல்லப்பட்டனர். மொத்தமாக 90பேர் இச் சுற்றிவளைப்பில் கொல்லப் பட்டனர். திருமணமான மற்றும் இளம்பெண்கள் கற்பழிக் கப்பட்டனர். நாகரிகத்தில் எவ்வளவு தூரம் வளர்ச்சி அடைந்துள்ளனர் என்பதை அன்று ஸ்ரீலங்காப்படையினர் உணர்த்தினர். எனினும் வல்வை மக்கள் அஞ்சவில்லை. இது ஒரு விக்கிர மாதித்த முயற்சி என்று பலர் எள்ளிநகையாடிய போதும் தமது நகரத்தைப் புதுப்பித்தனர். நிமிர்ந்தே நின்றனர்.

(தொடரும்)

---

# தீவுப்பகுதிக்கான அராலி வீதி விஸ்தரிக்கப்படவுள்ளது

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதி மக்களின் நன்மை கருதி அராலி கடல் வீதி விஸ்தரிக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு அன்ரன் அல்பிரட் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து தெரிவித்தார். இதன் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். ஊர்காவற்றுறை, வேலணை, மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட இடங்களையும், அகதி முகாம்களையும் அவர் பார்வையிட்டார்.

---

## சுதாராஜிற்கு சாகித்தியப் பரிசு

எதிர்வரும் மார்ச் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள சாகித்திய விழாவுக்கான சிறுகதைப்போட்டியில சுதாராஜின் "கொடுத்தல்" என்னும் சிறுகதைத் தொகுதி முதலாவது பரிசுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சிரித்திரன் வெளியீடாக 1983 இல் வெளிவந்த இந்நூலுக்கு சிரித்திரன் ஆசிரியர் சுந்தர் அவர்கள் முன்னுரை எழுதியுள்ளார். இலங்கையின் முதலாவது சிறுகதை எழுத்தாளரான சி சம்பந்தன் எழுதிய "சாகுந்தலகாவியம்" என்னும் நூல் கவிதைகளை முதல் பரிசைப் பெற்றுள்ளது.

---

## பாடநெறி தமிழில்

(யாழ்ப்பாணம்)

1991 ஆம் ஆண்டு தொடக்கம் ஆண்டு ஒன்பது வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு தமிழில தொழில்நுட்பப் பாட நெறிகள முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டு பரீட்சை நடாத்தி "கனிஷ்ட தொழில்நுட்ப பத்திரம்" எனும் சான்றிதழும் வழங்கப்பட உள்ளது.

1990 இல 52 எனும் சுற்று நிருபத்தில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாதாரணதர பரீட்சை எடுக்காத மாணவர்களுக்கு தொழில்நுட்ப அறிவு புகட்டும் நோக்குடன் 53 பயிற்சி நெறிகளும் பாடசாலைகளுக்கு அறிமுகப் படுத்தப்பட உள்ளது. இந்தப் பத்திரத்தை வைத்துக் கொண்டு மாணவர்கள் தொழில்நுட்ப மேற்படிப்பு செய்ய வசதியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வேல)

# வளைகுடா போரைக் கண்டித்து பிரான்ஸ் அமைச்சர் இராஜினாமா

(பரிஸ்)

வளைகுடா போர் ஐநா வெளியிட்ட தீர்மானங்களிலிருந்து தோழமை நாடுகளை விலகிச் செல்ல வைத்துவிடும் என்பதைக் காரணம் காட்டி பிரான்சின் பாதுகாப்பு அமைச்சர் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். இந்தப் போரின் இராணுவ அரசியல் விளைவுகள் குறித்து தொடர்ந்து சந்தேகம் வெளியிட்டு வந்த அவர் நேற்று தனது பதவி விலகலை பகிரங்கமாக அறிவித்தார். இரத அமைச்சை பிரான்சிய உள்துறை அமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

## முபாரக் பிதற்றுகிறார் - தாரிக் அசீஸ்

ஈராக்கிய ஸ்கட் ஏவுகணைகளை பட்டாசுகள் என தெரிவித்த எகிப்திய ஜனாதிபதி முபாரக்கிற்கு ஈராக்கிய வெளிவிவகார அமைச்சர் தாரிக் அசீஸ் பதில் அளித்துள்ளார்.

தாரிக் அசீஸின் இந்தப் பதிலினை நேற்று அம்மான் வானொலி அறிவித்தது. மரணபயத்தினால் ஏற்பட்ட புத்தி தடுமாற்றம் காரணமாகவே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என்றும் பட்டாசுகளால் ஏற்பட்ட சேதங்களை இஸ்ரேலிலும் சவுதிஅரேபியாவிலும் சென்று பார்க்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

---

**முல்லைத்தீவு**

பொறுப்பாளர் மேஜர் காந்தன் (வீரசிங்கம் திலீ குமார் திலீபன் திரியாய், திருக்கோணமலை), கப்டன் புத்தா (முருகன் சந்திரகுமார், கொழும்பு), லெப். ரஞ்சன் செல்வராஜா (சுகுணதன் ஒட்டிசுட்டான் முல்லைத்தீவு), மதுவன் (கணேசபை கருணாநிதி கொக்கிளாய், முல்லைத்தீவு) ஆகியோர் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தாது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (மு)

---

**இராணுவத்தினரின்**

(வயது 38), சுப்பிரமணியம் புஷ்பி (வயது 8) ஆகியோர் இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களாவர்.

இச் சம்பவத்தில் திருமதி மயில்வாகனம் மல்லிகா (வயது 26), மூன்று பிள்ளைகளின் தந்தையான தில்லைநாயகம் (வயசு 34 மீராவோடை) ஆகியோர் படுகாயமடைந்தவர்களாவர். (மு)

---

**பிள்ளைகள் மருந்து**

ழு தெரிவித்துள்ளது. ஆய்வு கூடப் பரிசோதனைகளின் போதே இக மதுசாரம் கலப்படம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிட்ட வகைச் 'இறைப் வாட்டர்' உடனடியாகச் சந்தையிலிருந்து வாபஸ் பெறும்படி தயாரிப்பாளர்களையும், மருந்த விற்பனையாளர்களையும் பேற்படி குழு கேட்டுள்ளது.

குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் சிலவகை விற்றமின் டொனிக்குகளிலும் மதுசாரம் (பசு) அபர் விதத்தில் கலக்கப்பட்டிருப்பதை மருந்தாக்க தொழில் நுட்ப ஆலோசனைக் குழு கண்டுபிடித்துள்ளது. ஒவ்வொரு பட்டிகளிலும் 5 வீதத்திற்கு மேல் மதுசாரம் கலக்கப்படவில்லை என்ற வெளிப்படுத்த வேண்டும். அடப "மருந்து", டொனிக்குகளில் 5 வீதத்திற்கு மேல் மதுசாரம் கலக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முதல் மருந்துகளில் என்ன விதத்தில் மதுசாரம் கலக்கப்பட்டுள்ளது என்பதை உற்பத்தியாளர் குறிப்பிடுத்த வேண்டும்.

மதுசாரம் மேலதிகமாகக் கலக்கப்பட்டுள்ள மேற்படி மருந்து வகைகள் யாழ்ப்பாணத்தில் விற்பனையாகலாம். பெற்றோர்கள் ஜக்கிரதை

---

## ஏழு மாதச் சம்பளம் இல்லை

யாழ். பிரதேச அரசாங்க மரக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு கடந்த ஏழு மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை. சம்பளக் கொடுப்பனவுகள் தொடர்பாக பிரதேச முகாமையாளர் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டும் இதுவரை பலன் கிடைக்கவில்லை.

இதனால் இந்த அலுவலகத்தில் கடமை புரியும் ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

---

**கைதான**

சென்னையில் நேற்று முதலமைச்சர் மு. கருணாநிதி விபரித்தார்

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கைது செய்யப்பட்ட 26000 பேரில் 1000 பேர் தவிர ஏஞ்சியவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள் என்றும், நேற்றுச் சென்னையில் முதலமைச்சர் தெரிவித்தார். மறியலின்போது கைது செய்யப்பட்ட சுமார் 24000 பேரில் 900 பேர்வரை நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்

ஒட்டுமொத்தமாகக் கைது செய்யப்பட்டவர்களில் 7000 பேர் கட்சிகள் ஒன்றிலும் சேராத சமூக விரோதிகள் என்று முதலமைச்சர் கூறினார். இப்போது காவலில் உள்ள சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர் மீதும் முயற்சிகள், வன்முறையைத் தூண்டும் சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடரப்படலாம் என்றும் முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்தார்.

---

**இராணுவத்தை**

வெளியேறியபோது விடுதலை புலிகள் எதிர்த்தாக்குதலைத் தொடுத்ததால் கடும் சண்டை மூண்டது. இருதரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற பலமணிநேர மோதலின்போது இராணுவத்தரப்பில் பலத்த சேதங்கள் ஏற்பட்டன. இழப்புக்களைச் சந்தித்த இராணுவத்தினர் பின்வாங்கி முகாம் திரும்பினர். (க)

---

**திறந்த**

மட்ட சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் செய்தியாளர் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் இலங்கையில் தற்பொழுது நடைபெறும் சண்டையில் இந்தியா உடன் தலையிட்டு பங்காற்றும் நிலையில் இல்லை எனவும் தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் வி. சி. சுக்ளா இலங்கை வெளிநாட்டு அமைச்சர் ஹரால்ட் ஹேரத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வந்திருந்த அமைச்சருடன் வந்த அதிகாரிகள் குழுவினரும் கலந்து கொண்டனர்.

இப் பேச்சுவார்த்தையில் இருநாடுகளுக்கும் இடையிலான அரசியல் பொருளாதாரம், வர்த்தகம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவது பற்றி ஆராயப்பட்டது.

இப் பேச்சுவார்த்தையில் இந்திய வெளிவிவகார செயலாளர் முஷ்குந்த் துபே, இணைச் செயலாளர் அபாங்கார், இலங்கைக்கான இந்திய தூதுவர் என். என். ஜா இலங்கை ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் சிறிலங்கா வெளிவுறவுச் செயலர் பேர்னாட் திலகரத்தின இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஸ்ரான்லி கல்பகே ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இப்பேச்சுவார்த்தை தொடர்பாக பத்திரிகையாளரிடம் பேசிய சிறிலங்கா அரசின் பிரதிநிதி பிரட்மன் வீரக்கோன் இந்திய விடுதலைப் போராளிகள் நடமாட்டம் கட்டுப்படுத்துவதில் இந்திய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளையிட்டு திருப்தி வெளியிட்டார்.

---

**6 ஆம் ஆண்டு**

தேசிய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அந்த அறிக்கையில் தேசியப் பாடசாலைகள் அல்லாத ஏனைய பாடசாலைகள் தமது பரீட்சைகளை பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி வைக்கலாம் என்றும் ஒவ்வொரு பாடசாலையும் பரீட்சார்த்திக்குரிய பரீட்சைக் கட்டணமாக ரூபா 30 ஐ பெற்றுக் கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஜோ)

---

**வளைகுடாவிற்கு**

பதற்கு மூடிபோல் போட்டுப் பாவிக்கப்படவுள்ளது. இது வழமையான கருத்தடை உபயோகத்துக்கல்ல; இது இராணுவ பாவனைகளுக்கே வழங்கப்படவுள்ளதாக இன்ரர்நஷனல் ரூப் என்ற பேற்படி உறைதயாரிக்கும் கம்பனி தெரிவித்துள்ளது.

---

**அடக்க ஆராதனை**

**லிகோரி அலன்**

49A, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் வாசஞ் செய்தவரும், செல்வராணியின் கணவனும், மல்கம, டடோனா, மல்கியா, சேரா ஆகியோரின் அன்புத் தந்தையுமாகிய லிகோரி அலன் பரிமைக்குட் பிரவேசித்தார். அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை பி.ப 2.30 மணிவரை அன்னாரின வீட்டில் வைக்கப்பட்டு பின்பு பி.ப. 3.00 மணிக்கு அடக்க ஆராதனைக்காக இலங்கை பெந்தெகொஸ்தே சபைச் சாலை 111, கண்டி வீதி, சுண்டுக்குளிக்கு எடுத்துச் செல்லப்படும். அடக்கம் பெந்தெகொஸ்தே சபை மயானம் வசந்தபுரத்தில் இடம்பெறும்.

இலங்கை பெந்தெகொஸ்தே சபை, சுண்டுக்குளி. (R/1063)

தகவல்: பொணிவெனசா சகோதரன்.

---



---

அமெரிக்க விமானங்களுக்கு பெற்றோல்

## சந்திரசேகர் அரசு மீது ராஜீவ்காந்தி கண்டனம்

(டில்லி)

பம்பாய் விமான நிலையத்தில் அமெரிக்க விமானங்கள் எரிபொருள் நிரப்ப வசதி செய்யப்பட்டிருப்பதனை கண்டித்து புதுடில்லியிலுள்ள ஈராக் தூதுவர் இந்திய வெளிவிவகார அமைச்சிடம் புகார் செய்துள்ளார்.

ஈராக்கிற்கும், இந்தியாவிற்கும் நீண்ட காலமாக நிலவி வரும் புரிந்துணர்வும், நம்பிக்கையும் இச் செயலால் பாதிக்கப்பட்டு விடும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் இராணுவ நோக்கங்களுக்கான விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பப்படவில்லை எனவும். பணிகாபிமான அடிப்படையில் பயணிகள் மற்றும் மருத்துவ சாதனப் பொருட்களுடனான விமானங்களுக்கே எரிபொருள் நிரப்பப்படுவதாகவும், அதுவும் வளைகுடாப் போர் ஆரம்பிக்கும் முன்பே ஏற்பட்ட உடன்பாட்டின்படியே இந்தியா நடப்பதாகவும் கூறினார்.

இதனிடையில் அமெரிக்க சார்பான படைகளுக்கு ஆதரவுதரும் வகையிலான இச் செயற்பாட்டின் மூலம் இந்திய அரசின் அணிசேராக் கொள்கைபாதிக்கப்படுவதாகவும், மரபு ரீதியான கொள்கைகளை மாற்ற சிறுபான்மை அரசு முற்படக்கூடாது என்றும் காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி கண்டனம் செய்துள்ளார்.

மேலும், அமெரிக்காவுக்கு உதவும் இந்தியாவின் போக்கு பாகிஸ்தான் இராணுவவட்டாரங்களில் அதிர்வுகளை ஏற்படுத்தியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

---

## 13 ஆம் நாள் போர்

★ அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் பாலைவனப் பகுதியோரத்தில் தரைவழியாக முன்னேறிச் சென்று எதிரித் தரப்பு இராணுவ நிலையொன்றை அண்மித்தன. ஆனால், மிக அருகில் சென்ற கூட்டுப்படைகள் கைது செய்யப்பட்ட போதுதான் அந்த நிலையில் இருந்தது கூட்டுப்படைகளின் அணியைச் சேர்ந்த பங்களாதேஷ் துருப்புக்கள் எனத் தெரிய வந்தது.

★ அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகளுக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில் அமெரிக்காவின் மற்றுமொரு விமானந்தாங்கிக் கப்பல் வளைகுடாவிற்குச் சென்றுள்ளது. இதில் பொருத்தப்பட்டிருக்கும் அதிநவீன போர்க்கருவிகள் இப்போதுதான் முதல் தடவையாக பயன்படுத்தப்பட உள்ளன.

★ குவைத்தின் எல்லையில் உள்ள ஈராக்கிய நிலைகளின் மீது அமெரிக்க மாலுமிகள் முதலாவது தரைவழித் தாக்குதலை நேற்று முன்தினம் ஆரம்பித்தன அமெரிக்க படை சாதனங்களுக்கு மிக சக்தி வாய்ந்த தரைவழித் தாக்குதல் ஆயுதமான ஹோவிற்சர் தள பீரங்கிகள் உபயோகப்படுத்தப்பட்டன என அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்

★ இஸ்ரேல்மீதும், சவூதிஅரேபியா மீதும் மீண்டும் ஈராக்கிய ஸ்கட் ஏவுகணைகள் நேற்று முன்தினம் தாக்கின. இவற்றுள் இரண்டு அமெரிக்காவின் பேற்றியட் ஏவுகணைகளால் அழிக்கப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

★ இஸ்ரேல்மீது ஈராக் நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்காமல் இருக்கப் போவதில்லையென இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக் ஷமீர் தெரிவித்துள்ளார். வளைகுடா யுத்தத்தை தமது நாடு மிகவும் கவனமாகவே பரிசீலனை செய்து வருவதாக அவர் செய்தியாளர் சந்திப்பில் கூறியுள்ளார். மேலும் கூறுகையில் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலுக்கு பதிலடி கொடுப்பது பற்றியும் விளைவுகள் பற்றியே ஆராய்ந்து வருகின்றோம் என்றார்.

★ அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படைகளின் தாக்குதலால் ஈராக் பொதுமக்களுக்கு ஏற்பட்ட சேதப்பற்றி ஈராக் நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது. 320 பேர் கொல்லப்பட்டதாகவும், 400பேர் காயமுற்றதாகவும் ஐ. நாவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் ஈராக் கூறியுள்ளது இராணுவ இலக்குகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றிக் குறிப்பிடவில்லை. உணவுத் தொழிற்சாலை விளையாட்டரங்கு நூதனசாலை, தேவாலயம், சுகாதார நிலையங்கள், உட்பட பல பொதுமக்கள் இலக்குகள் தாக்கப்பட்டதாக ஈராக் தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

★ குவைத்தில் இருக்கும் ஈராக்கிய குடியரசு இராணுவத்தின் காவல நிலைகள் மீது பிரெஞ்சு ஜாகுவார் போர் விமானங்கள் நேற்றுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. பிரான்சின் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ராய்ட்டர் இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

★ வளைகுடாப்போரை நிறுத்துவதற்கான சமாதான திட்டம் ஒன்றை தயாரிப்பதற்காக அணிசேரா இயக்க நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் அடுத்தமாதம் பெல்கிரேட்டில் சந்திக்க இருக்கிறார்கள் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வி. சி. சுக்ளா தெரிவித்தார்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது